Long Service Corporation

# கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழில் தொழிலாளர் வழிகாட்டி

---

## நீண்டகாலச் சேவை விடுப்பு என்றால் என்ன?

நீண்டகாலச் சேவை விடுப்பு என்பது பெரும்பாலான நியூ சவுத் வேல்ஸ் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் உரிமையாகும், அதில் அவர்கள் தொடர்ந்து 10 வருடங்கள் ஒரே முதலாளியிடம் பணிபுரிந்த பிறகு இரண்டு (2) மாத ஊதியத்துடன் கூடிய விடுப்பு எடுக்கலாம். அதன்பின் ஒவ்வொரு ஐந்து (5) ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் ஒரு (1) மாத ஊதியத்துடன் கூடிய விடுப்பு எடுக்கலாம்.

நியூ சவுத் வேல்ஸில் தகுதி மற்றும் நீண்டகாலச் சேவை விடுப்பு வழங்குவதற்கான நிபந்தனைகள் நீண்டகாலச் சேவை விடுப்புச் சட்டம் 1955 -ஆல் நிர்வகிக்கப்படுகிறது மற்றும் தொழில்துறை உறவுகளால் (Industrial Relations) கண்காணிக்கப்படுகிறது.

## கையடக்க நீண்டகாலச் சேவை (portable long service) என்றால் என்ன?

நியூ சவுத் வேல்ஸ் கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழிலில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பதிவுசெய்யப்பட்ட சேவையைக் கொண்ட தொழிலாளர்களுக்கு நீண்டகாலச் சேவைக் கழகம் (LSC) நீண்டகாலச் சேவை ஊதியத்தை வழங்குகிறது, அதன்பின் அவர்கள் பல முதலாளிகளுக்குப் பணிபுரிந்தார்களா அல்லது ஒப்பந்தகாரராகப் பணி புரிந்தார்களா என்பதில்லாமல் ஒவ்வொரு ஐந்து (5) வருடங்களுக்குப் பதிவுசெய்யப்பட்ட சேவைக்கும் வழங்குகிறது.

நியூ சவுத் வேல்ஸில் தகுதி மற்றும் நீண்டகாலச் சேவை ஊதியத்துக்கான மொத்தத் தொகையை வழங்குவதற்கான நிபந்தனைகள் கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழில் நீண்டகாலச் சேவை ஊதியச் சட்டம் 1986 எண் 19 -ஆல் நிர்வகிக்கப்படுகிறது. மேலும் தகவல்களுக்கு, திட்டத்துக்கான மேலோட்டத்தைப் (Scheme Overview) பார்க்கவும்.

## என்ன வேறுபாடு உள்ளது?

இரண்டு சட்டங்களின்படி உரிமையைப் பெறத் தகுதியுடைய தொழிலாளர்கள் தங்கள் முதலாளி மூலம் ஊதியத்துடன் கூடிய விடுப்பையோ அல்லது நீண்டகாலச் சேவைக் கழகத்திலிருந்து (LSC) மொத்தத் தொகையையோ பெறுவதற்குத் தெரிவு செய்யலாம். தொழிலாளி அதை எப்படி எடுக்கிறார், எப்போது எடுக்கிறார் என்பதைத் தெரிவு செய்வதைப் பொறுத்து ஊதியத் தொகை மாறுபடும்.

நீண்டகாலச் சேவை விடுப்புச் சட்டம் 1955 -இன் கீழ் தங்கள் முதலாளியிடமிருந்து உரிமையைப் பெற்ற தொழிலாளர்கள் அதே காலத்திற்கு நீண்டகாலச் சேவைக் கழகத்திலிருந்து (LSC) உரிமையைப் பெறத் தகுதியற்றவர்கள்

ஓய்வுகால உதவித்தொகை (superannuation) மற்றும் பணிநீக்கம் (redundancy) ஆகியவை பெரும்பாலும் நீண்டகாலச் சேவைத் தகுதிகளாகத் தவறாகக் கருதப்படுகின்றன, இருப்பினும் அவை ஒரே மாதிரியானவை அல்ல.

## இது எப்படி வேலை செய்கிறது?

நியூ சவுத் வேல்ஸில் கட்டிடம் மற்றும் கட்டுமானப் பணிகளைச் செய்யும் தகுதி வாய்ந்த ஊழியர்களுக்கு நீண்டகாலச் சேவைக் கழகத்தில் (LSC) பதிவுசெய்து சேவையை ஆவணப்படுத்த வேண்டும். முதலாளியின் கடமைகள் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, உங்கள் சட்டப்பூர்வக் கடமைகளைப் (Your Legal Obligations) பார்க்கவும்.

ஒப்பந்ததாரர்கள் ஒவ்வொரு நிதியாண்டும் ஒரு சுயதொழில் செய்வோர் சேவைச் சான்றிதழைத் தாக்கல் செய்யப் பதிவுசெய்யப்பட்ட வரி முகவர் ஒருவரை வைத்திருக்க வேண்டும்.

ஒரு வருடப் பதிவு சேவை 220 நாட்களுக்கு சமம். வார இறுதி நாட்கள், வருடாந்திர விடுப்பு, நோய் விடுப்பு, பொது விடுமுறை நாட்கள் மற்றும் தொழிலகச் சுற்றுலா நாட்கள் ஆகியவற்றைக் கழிப்பதன் மூலம் இது கணக்கிடப்படுகிறது. மேலும் தகவலுக்கு, சேவை வரவுகளைப் பெறுதல் (Get Service Credits).

## எவ்வளவு செலவாகும்?

நியூ சவுத் வேல்ஸின் கட்டிடம் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான வரித்தொகை மூலம் இத்திட்டத்திற்கு நிதியளிக்கப்படுவதால், முதலாளிகள் அல்லது தொழிலாளர்களுக்கு எந்தச் செலவும் இல்லை, அதில் வேலைகளுக்கான செலவு 250,000 டாலர்கள் மற்றும் அதற்கு மேலும் ஆகும், அது கட்டிட வேலைகளைச் செய்த நபரால் செலுத்தப்படுகிறது. மேலும் தகவல்களுக்கு, நீண்டகாலச் சேவை வரியைப் (Long service levy) பார்க்கவும்.

### நான் என்ன செய்ய வேண்டும்?

**பணியாளர் பதிவு எண் -** நீங்கள் ஒரு புதிய வேலையைத் தொடங்கும் போதெல்லாம், உங்கள் நீண்டகாலச் சேவைக் கழகப் (LSC) பணியாளர் பதிவு எண்ணையும், உங்கள் தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரியையும் உங்கள் முதலாளிக்கு வழங்க வேண்டும், இதன் மூலம் அவர் ஒவ்வோர் ஆண்டும் உங்களுக்கானச் சேவையைப் பதிவு செய்யலாம். நீங்கள் ஓர் ஒப்பந்ததாரராக இருந்தால், உங்கள் வரி முகவர் உங்கள் சேவையைப் பதிவு செய்ய வேண்டும். மேலும் தகவல்களுக்கு, திட்டத்தில் சேருவதைப் (Joining the Scheme) பார்க்கவும்.

**வருடாந்திர அறிக்கை -** ஒவ்வொரு நிதியாண்டிலும் உங்கள் வருடாந்திர அறிக்கையானது தொழிலாளர் இணைய முகப்பு (Worker Portal) வழியாக கிடைக்கும். உங்களின் தகுதி வாய்ந்த அனைத்து நியூ சவுத் வேல்ஸ் கட்டிடம் மற்றும் கட்டுமானப் பணிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள, உங்கள் வருடாந்திர அறிக்கையைச் சரிபார்ப்பது முக்கியமாகும். மேலும் தகவல்களுக்கு, வருடாந்திர அறிக்கைகளைப் (Annual Statements) பார்க்கவும்.

நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வருடாந்திர அறிக்கை அறிவிப்புகளைப் பெற்றால், பொதுவாக நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகளை வைத்திருக்கிறீர்கள் என்று பொருளாகும். உங்களிடம் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவு எண்கள் இருந்தால், நீங்கள் தொழிலாளர் இணைய முகப்பு (Worker Portal) வழியாக எங்களுக்குத் தெரிவிக்கலாம் அல்லது இணைய வழியாக எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

தொழிலாளர் இணைய முகப்பு (Worker Portal) - எந்த நேரத்திலும் உங்கள் பதிவுசெய்யப்பட்ட சேவையைச் சரிபார்த்து, உங்கள் தொடர்பு விவரங்கள் சரியானவை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான இணைய முகப்பைப் பெற பதிவு செய்து கொள்ளவும். பதிவு செய்து கொள்ள பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்: http://www.longservice.nsw.gov.au/online-services.

உங்கள் பதிவுசெய்யப்பட்ட சேவையைச் சரிபார்க்கவும் - உங்கள் நியூ சவுத் வேல்ஸ் கட்டிடம் மற்றும் கட்டுமானப் பணிகள் அனைத்தும் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். உங்களால் வேலை செய்ய முடியாத பட்சத்தில், சேவை அல்லாத நாட்கள், சிறப்பு வரவுகள் அல்லது நீண்டகாலச் சேவை ஊதியத்திற்கு நீங்கள் தகுதியுள்ளவரா எனச் சரிபார்க்கவும். உங்களுக்கு ஐந்து (5) ஆண்டுகளுக்கும் குறைவான சேவை பதிவு செய்யப்பட்டு, நான்கு (4) ஆண்டுகளுக்குச் சேவை எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால், உங்கள் பதிவு நீக்கப்படலாம். நீக்கப்படும் சாத்தியத்தைத் தடுக்க, உங்கள் சூழ்நிலைகள் குறித்து எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும் தகவல்களுக்கு, பதிவை நீக்கம் செய்தலைப் (Cancellation of registration) பார்க்கவும்.

### அடங்கக்கூடிய வேலை வகைகள்

நியூ சவுத் வேல்ஸில் கட்டிடம் மற்றும் கட்டுமானத் துறையில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் போன்றவர்கள் (பணியாளர் (employee), ஒப்பந்ததாரர் (contractor), தொழில் பழகுநர் (apprentice), தற்காலிகப் பணியாளர் (casual) அல்லது ஒப்பந்தப் பணியாளர் (labour hire) என யாராக இருந்தாலும்) தகுதி வாய்ந்த தொழிலாளர்கள் ஆவார்கள்.

தொழிலாளர்கள் பின்வரும் மூன்று (3) பிரிவான சோதனையைச் சந்திக்க வேண்டும்:

1. கட்டாயம் தனியார் துறையில் இருக்க வேண்டும்
2. கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழில் நீண்டகாலச் சேவை ஊதியச் சட்டம் 1986 எண்19 - ஆல் வரையறுக்கப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் கட்டுமானத் துறையில் நியூ சவுத் வேல்ஸில் வேலை செய்ய வேண்டும்
3. கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழில் நீண்டகாலச் சேவை ஊதிய ஒழுங்குமுறை 2022 -இல் பரிந்துரைக்கப்பட்ட சலுகையின் கீழ் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்ட வேலையைச் செய்ய வேண்டும்.

குறிப்பு: குறிப்பிடப்பட்ட சலுகையில் ஓர் ஊதிய விகிதத்தை ஒரு வேலை வகை பெற்றிருந்தால், அந்த வேலை தானாகவே திட்டத்திற்குத் தகுதி பெறாது, அந்த வேலையானது மூன்று (3) பிரிவுத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். மேலும் தகவல்களுக்கு, அடங்கக்கூடிய வேலை வகைகளைப் (Type of Work Covered) பார்க்கவும்.

### காமன்வெல்த் இடங்களில் வேலை

காமன்வெல்த் இடங்கள் காமன்வெல்த் அரசாங்கத்தின் அதிகார வரம்பிற்குள் வருவதால், நீண்டகாலச் சேவைக் கழகத்தால் (LSC) நிர்வகிக்கப்படும் நியூ சவுத் வேல்ஸ் கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழில் நீண்டகாலச் சேவை ஊதியச் சட்டத்தின் கீழ் காமன்வெல்த் இடங்களில் நடத்தப்படும் பணிகளுக்கு வரவு வைக்க முடியாது, இதைத் தீர்க்க நாங்கள் காமன்வெல்த் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். மேலும் தகவல்களுக்கு காமன்வெல்த் இடங்களைப் (Commonwealth places) பார்க்கவும்.

### நியூ சவுத் வேல்சுக்கு வெளியே வேலை செய்தல்

ஒவ்வொரு மாநிலமும் பிரதேசமும் அதன் சொந்த கையடக்கத் திட்டத்தைக் (portable scheme) கொண்டுள்ளன. நியூ சவுத் வேல்சுக்கு வெளியே கட்டிடம் மற்றும் கட்டுமானப் பணிகளைச் செய்யும் தொழிலாளர்கள், வேலை செய்யப்பட்ட மாநிலம் அல்லது பிரதேசத்தில் சேவை வரவுகளைப் பதிவுசெய்து ஆவணப்படுத்தத் தகுதியுடையவர்களாக இருக்கலாம். மேலும் தகவல்களுக்கு, நியூ சவுத் வேல்சுக்கு வெளியே வேலை செய்தலைப் (Working outside NSW) பார்க்கவும்.

### ஊதியத்திற்கு நான் எப்போது விண்ணப்பிக்க முடியும்?

குறைந்தபட்சம் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்தபின், நீங்கள் நீண்டகாலச் சேவை ஊதியத்திற்கு விண்ணப்பிக்கலாம்:

- 10 வருட சேவை, அதன் பிறகு ஒவ்வொரு ஐந்து (5) வருடங்களுக்கும், தொழில்துறையில் நீடித்திருத்தல்
- 5 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் பதிவுசெய்யப்பட்ட சேவை, மற்றும் தொழில்துறையில் நிரந்தரமாக வேலையை விட்டுவிடுதல்
- 55 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் பதிவுசெய்யப்பட்ட சேவை, மற்றும் தொழில்துறையில் வேலை செய்ய முடியாத அளவுக்கு முற்றிலும் மற்றும் நிரந்தரமான இயலாமை
- 55 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் பதிவுசெய்யப்பட்ட சேவை, மற்றும் 55 அல்லது அதற்கு மேற்பட்ட வயதில் தொழில்துறையிலிருந்து ஓய்வு பெறுதல்
- 55 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் பதிவுசெய்யப்பட்ட சேவை, தொழிலில் இருந்து ஓய்வுபெற்று, மூத்தோர்க்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டிருத்தல்
- குறைந்தபட்சம் 55 நாட்கள் பதிவுசெய்யப்பட்ட சேவை இருக்கும் பட்சத்தில், அல்லது இறந்த தொழிலாளியின் அண்மை உறவினர்அல்லது சொத்துரிமைக்காரரர் உரிமை கோரலாம்.

இது அனைத்து மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் பதிவுசெய்யப்பட்ட சேவையின் மொத்தச் சேர்க்கையாக இருக்கலாம், இருப்பினும் ஊதியத்திற்கான விண்ணப்பம் வழங்கப்பட்டு, மிக சமீபத்திய சேவை பதிவுசெய்யப்பட்ட திட்டத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும் தகவல்களுக்கு, நீண்டகாலச் சேவை ஊதியத்தைப் (Long service payment) பார்க்கவும்.

## விடுபட்ட சேவை

நீங்கள் கடந்த கால வேலைகளை அங்கீகரிக்க  தொழிலாளர் இணைய முகப்பு (Worker Portal) வழியாக விண்ணப்பித்து, பொருத்தமான சான்றுகளை வழங்கலாம். மேலும் தகவல்களுக்கு, பொருத்தமான சான்றுகளைப் (Suitable Evidence) பார்க்கவும்.

அவசியம் – பின்வரும் அனைத்தையும் திருப்திப்படுத்தும் வகையிலான பொருத்தமான சான்றுகளை வேலை சார்ந்த ஆவணங்கள் சான்றளிக்க வேண்டும்:

1. **விண்ணப்பித்த காலத்தில் செய்த வேலை -** நீங்கள் செய்த வேலை வகையின் விளக்கம்
2. **விண்ணப்பித்த காலத்தில் செய்யப்பட்ட வேலை -** முழு வேலைக் காலம் (ஒவ்வொரு நிதியாண்டு முழுவதுக்குமான வேலைச் சான்றுகள் உட்பட)
3. **பணியமர்த்துபவர் விவரங்கள் -** பணியமர்த்துபவர் பெயர் மற்றும் ஏ.பி.என். (ABN)
4. **தொழிலாளி விவரங்கள் -** உங்கள் முழுப் பெயர்.

## மேல்முறையீடுகள்

நீண்டகாலச் சேவைக் கழகத்தால் (LSC) எடுக்கப்பட்ட சில முடிவுகளுக்கு எதிராக சுயாதீன கட்டிடம் மற்றும் கட்டுமான நீண்டகாலச் சேவை ஊதியக் குழுவிடம் தொழிலாளர்கள் அல்லது இறந்த தொழிலாளியின் தனிப்பட்ட பிரதிநிதிகள் மேல்முறையீடு செய்யலாம்:

- ஒரு தொழிலாளியின் சேவையை நிராகரித்தல்
- ஒரு தொழிலாளியின் பதிவை நிராகரித்தல் அல்லது நீக்குதல்
- சேவை வரவுகளைச் சேர்க்க மறுத்தல்.

பின்வரும் முடிவுகளுக்கு மேல்முறையீடு செய்ய உரிமை இல்லை:

- நீண்டகாலச் சேவை ஊதியத்திற்குப் பயன்படுத்தப்படும் ஊதிய விகிதம் (s.50A -இன் கீழ் வழங்கப்பட்டுள்ளதைத் தவிர)
- ஒரு தொழிலாளியின் பதிவை முன்தேதியிட மறுத்தல்
- நீக்கப்பட்ட பதிவை மீட்டெடுக்க மறுத்தல்
- உரிமைக் கோரலைத் தொடர்ந்து ஒரு பதிவை நீக்குதல் (வெளியேறுதல், மருத்துவ இயலாமை, வயது ஓய்வு, இறப்பு) அல்லது தன்னார்வ நீக்கம்
- தொழிலாளி பதிவுத் தேதிக்கு முந்தைய பணிக் காலங்களுக்கான சேவையை வரவு வைக்க மறுத்தல்
- தற்போதைய நிலை உயிர்ப்புடன் இல்லாத போது ஒரு தொழிலாளியின் பதிவில் சேவையை வரவு வைக்க மறுத்தல்
- சேவை பாதுகாப்புக் கோரிக்கைகளை ஏற்க மறுத்தல்.

முடிவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 42 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யப்பட வேண்டும்.

விதிவிலக்கான சூழ்நிலைகள் இருப்பதாக அவர்கள் கருதினால், நீண்டகாலச் சேவைக் கழகம் (LSC) ஒரு முடிவை அறிவித்த ஆறு (6) மாதங்களுக்குள் குழுத் தலைவர் மேல்முறையீட்டை ஏற்கலாம். முடிவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு (6) மாதங்களுக்கு மேல் மேல்முறையீடு செய்ய முடியாது. மேலும் தகவல்களுக்கு, மேல்முறையீட்டுக் கழகத்தின் முடிவுகளைப் (Appealing Corporation’s Decisions) பார்க்கவும்.